UNHCR
The UN Refugee Agency

## இந்தோநேசியாவில் தஞ்சம் கோருபவர்களக்கு தகவள்

**யு.என்.எச்.சி.ஆர் ஏன்றாள் என்ன?**
ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணைக்குழு (UNHCR), 1951-ல் அமைக்கப்பட்டது. உலகத்தில் உள்ள அகதிகளுக்கு, பாதுகாப்பும், நீண்டகால தீர்வுகளை கொடுப்பதுமே அதுவின் பணியாகும். யு.என்.எச்.சி.ஆர் அகதிகளுக்கு பாதுகாப்பும், நீன்டகால நிரந்தர தீர்வுகளை கோடுப்பதற்க்கும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பாடும்.

**ஒரு அகதி என்றால் யார்?**
ஒரு அகதி என்றால் அவரது / அவளின் இனம், மதம், குடியுரிமை, சில சமுதாய இயக்கங்களில் அங்கத்தினராக இருந்ததால் அல்லது அரசியல் கருத்து வேறுப்பாடுகளால் தொடற்ந்து துன்பப்படுத்தியதுனால் அவரின் / அவளின் நாட்டை விட்டு தப்பியோடியவர். ஒரு அகதி அவர் / அவள் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளவர் ஏன் என்றாள் அவரது நாடு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை அல்லது முன்வரவில்லை.

**தஞ்சம் கோருபவர் என்றால் யார்?**
தஞ்சம் கோருபவர் ஏன்றால் ஒருவர் அகதி அந்தஸ்து பெறுவதற்க்கு விண்ணப்பம் செய்துவிட்டு அகதியா இல்லையா என்று ஒரு முடிவுக்கு காத்துக்கொண்டிருப்பவர்.

**யு.என்.எச்.சி.ஆரிடம் நான் அகதி அந்தஸ்து பெறுவதற்கு எப்படி விண்ணப்பம் செய்வது:**
இந்தோநேசியாவில் அகதி அந்தஸ்து பெறுவதற்க்கு விரும்பினால் நீங்கள் RSD (அகதி அந்தஸ்து தீர்மானம்) விண்ணப்ப ஆவணத்தை பூர்த்தி செய்ய வேண்டும். குடும்பத்தில் ஒவ்வொரு பெரியவர்களும் (18 வயது அல்லது மேற்பட்டவர்கள்) ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தனி ஆவணதில் ஏன்

உங்கள் நாட்டை விட்டு வெளியேறிநீர்கள், ஏன் திரும்ப முடியாது என்று சுருக்கமாக வழங்க வேண்டும். நீங்கள் உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். இந்த படிவத்தில் தவறான தகவலை வழங்கிருந்தால், உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எல்லா தகவல்களையும் மிக ரகசியமாக வைத்திருக்கப்படும். எந்த ஒரு மூன்றாவது நபருக்கோ அல்லது மற்ற குடும்பத்தினருக்கோ தெறிவிக்கப்படாது. நீங்கள் படிக்க அல்லது எழுத முடியாது என்றால், யு.என்.எச்.சி.ஆர் உங்கள் படிவத்தை பூர்த்தி செய்ய உதவும். உங்களுக்கு ஒரே பால் இனத்தை சேர்ந்தவர் நேர்காணலை செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டீர்கள் என்றால் நீங்கள் யு.என்.எச்.சி.ஆர் பதிவு செய்யும் அதிகாரியிடம் கேட்கலாம்.

நீங்கள் படிவத்தை நிரப்பிய பிறகு யு.என்.எச்.சி.ஆர் அதிகாரி ஒரு பதிவு நேர்காணல் செய்வார். உங்கள் அடிப்படைக் குறிப்புகள் (Biodata) மற்றும் அகதி பெறுவதற்க்கான விவரங்கள் சேகரிப்பார், உங்கள் புகைப்படத்தை எடுப்பார், கைரேகைகள் மற்றும் கருவிழி ஸ்கேன் செய்வார்.

பதிவு நேர்காணலுக்கு பிறகு உங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் ஒரு அடையாள அட்டையும் மற்றும் அகதி அந்தஸ்து பெருவதற்க்கு தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்க இரண்டாவது நேர்காணலுக்கு ஒரு சந்திப்பு சீட்டு வழங்கப்படும். ஏனெனில் தஞ்சம் கோருவோர்கள் பெரிய அளவில் யு.என்.எச்.சி.ஆரை நாடுவதுநாள் உங்களுக்கு நேர்காணல் நடக்க பதிவு தேதியிலிருந்து குறைந்தது இரண்டு ஆண்டுகள் எடுக்கும்.

| |
|---|
| **பதிவு ஜகார்தாவில் நடத்தப்படுகிறது திங்கட்கிழமையில் இருந்து வியாழக்கிழமை வரை 7.30 மணி முதல்** |

**அகதி அந்தஸ்து தீர்மானிக்கும் (RSD) நேர்காணல்:**
குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நேர்காணலுக்கு வரவேண்டும். நேர்காணல் தனித்தனியாக செய்யப்படும். இந்த நேர்காணல் ஒரு தகுதி பெற்ற யு.என்.எச்.சி.ஆர் அதிகாரியால் நடத்தப்படும். தேவைப்பட்டால் ஒரு மொழிப்பெயர்பாளரை அளிக்கப்படலாம். உங்களை ஒரு குறிப்பிட்ட மொழியில் நேர்காணல் செய்ய வேண்டும் மற்றும் ஒரே பாலினத்தைச் சேர்ந்த அதிகாரியாக இருக்க வேண்டும் என்றால் நாங்கள் முடிந்த வரை முயற்ச்சி செய்வோம்.

நேர்காணல் சமயம் உங்களுக்கு நாட்டை விட்டு வெளியேறிய காரணங்களை மற்றும் ஏன் உங்கள் நாட்டிற்க்கு திறும்ப செல்ல இயலாது என்ற காரணத்தையும் கூறுவதற்க்கு வாய்ப்பு தரப்படும். உங்களுக்கு மிக முக்கியமான ஆவணங்கள், அடையாள அட்டைகள் அல்லது உங்களை உறுதி செய்யக் கூடிய மற்ற ஆவணங்களை நேர்காணலின் போது கொண்டு வரவும். நீங்கள் உண்மையை கூறவேண்டும். தவறான தகவல்களை கொடுப்பதும் மற்றும் தகவல்களை மறைத்துவைப்பதும் உங்கள் முடிவை பாதிக்கும்.

| |
|---|
| நீங்கள் கொடுக்கும் அனைத்து தகவல்களையும் மிக்க இரகசியமாக பாதுகாகப்படும், அதாவது உங்கள் அனுமதி இல்லாமல் மூன்றாவது நபருக்கு கொடுக்கப்படாது ஆனால் இந்தோநேசிய அரசாங்க அதிகாரிகளுக்கு நீங்கள் இந்தோநேசியவில் இருப்பதை தெரியப்படுதவதற்க்கு உங்களின் அடிப்படை தகவல்களை மட்டும் தெரிவிக்கப்படலாம். |

அந்த குறிப்பிட்ட திகதியில் நீங்கள் நேர்காணலுக்கு வரமுடியவில்லை என்றால் 6 வாரங்களுக்குள் யு.என்.எச்.சி.ஆரை தொடர்புகொள்ளவும் அல்லது யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்திற்க்கு சென்று தெரியப்படுத்தவும். இல்லை என்றால் உங்களின் கோப்பையை மூடிவிட்டு குடிநுழைவு துறை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

**நான் என் முடிவை பெற்ற பின் என்ன நடக்கும்?**
உங்கள் அகதி நிலை பெறுவதற்க்கான விண்ணப்பத்தை யு.என்.எச்.சி.ஆர் ஆழ்ந்த பரிசோதனை செய்யும். நீங்கள் கொடுத்த தகவல்களையும் மற்றும் உங்கள் நாட்டில் உள்ள தகவள்களையும், யு.என்.எச்.சி.ஆர் ஆழமாக பரிசோதனை செய்யும். பின்பு கூடிய விரைவில் யு.என்.எச்.சி.ஆர் உங்களுக்கு ஒரு முடிவை அறிவிக்கும். ஆனால் இது சில காலம் ஆகலாம்.

உங்களை அகதி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஒரு யு.என்.எச்.சி.ஆர் அதிகாரி உங்களுக்கு இந்த முடிவை அறிவிப்பார். அடுத்தக்கட்டமாக என்ன நடக்கும் என்றும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் உங்களுக்கு கடிதம் மூலம் உங்களை நிராகரிக்கப்பட்ட காரணத்தை கூறப்படும். இந்த முடிவு தவறு என்று நினைத்தீர்களானால், நீங்கள் மீண்டும் 30 நாட்களுக்குள் மறு விண்ணப்பம் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுக்கு, மறு விண்ணப்பம் செய்வதற்க்கு ஒரு ஆவணம் கொடுக்கப்படும். நீங்கள் 30 நாட்களுக்குள் மறு விண்ணப்பம் செய்ய தவரும் பட்சத்தில் உங்கள் கோப்பை மூடப்பட்டு இந்தோனேஷிய அரசாங்கத்திற்க்கு அறிவிக்கப்படும். நீங்கள் மறு விண்ணப்பம் செய்தால் உங்களை இரண்டாவது முறையாக மற்றொரு யு.என்.எச்.சி.ஆர் அதிகாரியாள் நேர்காணல் செய்யப்படலாம். இரண்டாவது முறையாக நீங்கள் பெறக்கூடிய முடிவு இறுதி முடிவாகும். இரண்டாவது முறையாக உங்கள்

விண்ணப்பத்தை நிராகரிக்கப்பட்டால் யு.என்.எச்.சி.ஆர் உங்களுக்கு தொடர்ந்து உதவி அளிக்க இயலாது.

### இந்தோநேசியாவில் என்னுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் என்ன?

ஒரு தஞ்சம் கோருபவர்களாக இருக்கும் உங்களை, யு.என்.எச்.சி.ஆர், இந்தோநேசியா அரசாங்கத்திடம் கலந்துரையாடி உங்களை உங்கள் நாட்டிற்க்கு திரும்ப அனுப்பபடாமல் பாதுகாப்பு கொடுக்கும்.

நீங்கள் இந்தோநேசியா நாட்டின் சட்டதிட்டத்தை கடைப்பிடித்து உள்ளூர் கலாச்சாரத்தை மற்றும் பழக்க வழக்கங்களை மதித்து நடந்துக்கொள்ள வேண்டும். இந்தோநேசியாவில் நீங்கள் குற்றம் செய்தால் உங்களை இந்தோநேசியா சட்டத்தின் படி குற்றம் சாற்றப்படும். நீங்கள் குற்றம் செய்தால் யு.என்.எச்.சி.ஆர் உங்கள் குற்ற வழக்கில் தலையிடாது அல்லது தடுக்க முயற்சிக்காது. ஆனால் உங்களை சட்ட உதவி அமைப்புக்கு சட்ட ரீதியில் பிரதிநிதிக்க குறிக்கும்.

**முக்கிய அறிவிப்பு**

இந்தோநேசியா சட்டத்தின்கீழ் நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள குடிநுழைவு துறை அலுவலகத்தில் பதிய வெண்டும். இது எல்லா இந்தோநேசியா மக்களுக்கும் வெளி நாட்டவர்களுக்கும் பொருந்தும். இது உங்கள் சொந்த பாதுகாப்புக்கு. நீங்கள் பதியவில்லை என்றால் நீங்கள் நாட்டில் சட்டவிரோத குடியிருப்புக்காக கைது செய்யப்படுவீர்கள். இதை பற்றி விளக்குவதற்க்கு ஒரு தனி தகவல் குறிப்பு வழங்கப்படும்.

### இந்தோநேசியாவில் யு.என்.எச்.சி.ஆர் எனக்கு பண உதவி செய்யுமா?

இந்தோநேசியாவில் தஞ்சம் கோருபவர்களுக்கும் அகதிகளுக்கும் யு.என்.எச்.சி.ஆர் உதவ நிதி பற்றாக்குறையாக உள்ளது. உங்களிடையே மிகவும் பலவீனமானவர்களுக்கு உதவ முடியும். உதவி பெறும் ஆட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது மற்றும் இருக்கும் நிதியை பொறுத்தது.

### எனக்கு மருத்துவப் பிரச்சனை இருந்தால் எப்படி?

எல்லா தஞ்சம் கோருபவர்களும் அகதிகளும் அரசாங்கத்தால் நடத்தப்படும் சுகாதார வசதிகளில் (புஸ்கஸ்மாஸ் என அழைக்கப்படும்) குறைந்த செலவில் மருத்துவ சிகிச்சை பெற முடியும். விவரங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் வழங்கும் துண்டு பிரசுரத்தை பார்க்கவும்.

### எனக்கு நீண்டகால முடிவுகள் கிடைக்குமா?:

யு.என்.எச்.சி.ஆர் உலகத்தில் உள்ள அகதிகளக்கு நீண்டகால முடிவுகளை வழிவகுத்து கொடுப்பதற்கு அங்கிகாரம் பெற்றுள்ளது. மூன்று நீண்டகால முடிவுகள் இருக்கின்றன: சொந்த விருப்பத்துடன் சொந்த நாட்டிற்க்கு திரும்பவது, இந்த நாட்டிலேயே மக்களோடு சேர்ந்து வாழ்வது மற்றும் மூன்றாவது நாட்டிற்க்கு மருகுடியேற்றம் செய்யப்படுவது.

எல்லா அகதிகளுக்கும் மருகுடியேற்றம் என்பது அவர்களின் ஆட்டமெட்டிக் உரிமை அல்ல. மீள்குடியேற்றம் என்பது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு பொருந்தும் ஒரு தீர்வு. அதாவது மிகவும் பாதிக்கப்பட்ட அல்லது மிகவும் பாதுகாப்பு தேவையான அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இந்தோனேஷியாவில் இருந்த காலக்கட்டத்திற்கும் மீள்குடியேற்றத்திற்கு தகுதி பெறுவதற்க்கும் என்த ஒரு தொடர்பும் கிடையாது. எனவே நீங்கள் இந்தோனேஷியாவில் இருந்து மீள்குடியேற்றம் பயனடைய முடியாது என்று புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு கிடைக்கும் அனைத்து தேர்வுகலையும் கருத்தில் கொள்ள வேண்டும், பாதுகாப்பாக செல்ல முடியும் என்றால் உங்கள் நாட்டிற்க்கு திரும்புவது உட்பட. உங்கள் சொந்த நாட்டிற்க்கு திரும்புவதை பற்றி கேள்விகள் இருந்தால் வெள்ளிக்கிழமைகளில் நீங்கள் ஜகார்த்தாவில் உள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தை அணுகலாம்.

### நான் எப்படி என் வழக்கு நிலையை பற்றி தகவல் பெறுவது?

உங்கள் வழக்கு நிலையின் அடிப்படை விவரங்களை பெறுவதற்க்கு யு.என்.எச்.சி.ஆர் ஆன்லைன் (online) தகவல் தளத்தை (database) உருவாக்கியுள்ளது:

**http://services.unhcr.or.id**

மேலும் யு.என்.எச்.சி.ஆர் செவ்வாய்க்கிழமையில் இருந்து வியாழக்கிழமை வரை, 13.00 - 1600 வரை எங்கள் ஜகார்தா அலுவலகத்தில் நேர்முக ஆலோசனை வழங்குகிறது. உங்கள் மொழிக்கு ஒரு பொருத்தமான மொழிப்பெயர்ப்பாளர் கிடைக்கும் என்று உறுதி செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்ளவும். அதனால் நீங்கள் ஆங்கிலம் அல்லது இந்தோனேஷியா மொழி பேச முடியாது என்றால் நீங்கள் யு.என்.எச்.சி.ஆரிடம் தொடர்புகொள்வதற்க்கு உதவ யாரையாவது அழைத்து வர வேண்டும்.

யு.என்.எச்.சி.ஆர் மேலும் தொலைபேசி மூலம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில், 1400 - 1700 வரை ஆலோசனை வழங்குகிறது. அழைக்கும் எண்: **+62(21) 2964 3665**

உங்கள் வழக்கு சம்பந்தமான தகவல்களை யு.என்.எச்.சி.ஆருக்கு வழங்க கீழே உள்ள தொடர்பு விவரங்களுக்கு எழுத முடியும் ஆனால் நிறைய கடிதங்கள் வருவதனால் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்க முடியாது. தயவு செய்து யு.என்.எச்.சி.ஆருக்கு திரும்பத் திரும்ப கடிதங்கள் எழுத வேண்டாம் ஏனென்றால் வழக்கு பரிசீலனை செய்யும் நேரத்தை பாதிக்கும்.

### எனக்கு புகார் இருந்தால் நான் என்ன செய்வது?

யு.என்.எச்.சி.ஆர் உங்களின் கோப்பையை திருப்திகரமாக கையாளாவிட்டால் நீங்கள் ஒரு கடிதம் மூலமாக புகார் செய்து ஜகார்த்தா யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தின் முன் உள்ள புகார் பெட்டியில் போடலாம். யு.என்.எச்.சி.ஆருக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் (fax) மூலம் கூட தெரியப்படுத்தலாம். (கீழே உள்ள தொடர்பு விவரங்களுக்கு). பெயரில்லாத மற்றும் போதுமான ஆதாரங்கள் இல்லாத புகார் மீது யு.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை எடுக்க கடினம் என்பதை நினைவில் கொள்ளவும்.

யு.என்.எச்.சி.ஆர் வழங்கும் சேவைகள் அனைத்தும் முற்றிலும் இலவசம். பதிவு செய்வது, நேர்காணல், யு.என்.எச்.சி.ஆர் ஆவணங்கள், மற்றும் மறுகுடியேற்றம். நீங்கள் எல்லாக்கட்டத்திலும் எந்த பாரபட்சமும் இல்லாமல், எந்த பணமோ அல்லது பரிசுகள் கேட்கப்படாத இந்த சேவைகளை பெறுவதற்கு உரிமை உண்டு. தஞ்சம் கோருபவர்களிடம் மற்றும் அகதிகளிடம் பணத்தை பறிப்பது அல்லது உதவிகள் கேட்பது இந்தோனேசிய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் தண்டிக்கப்படும்.

யு.என்.எச்.சி.ஆர் வழங்கும் சேவைகளுக்கு ஒரு யு.என்.எச்.சி.ஆர் பணியாளர், ஒரு மொழிப்பெயர்ப்பாளர் அல்லது பாதுக்காவலர் உங்களிடம் பணம் செலுத்த கேட்டால் நீங்கள் உடனடியாக யு.என்.எச்.சி.ஆருக்கு புகார் செய்யவும்.

**UNHCR Indonesia**
**Menara Ravindo**
**Jl. Kebon Sirih Kav.75**
**Jakarta Pusat**
**Tel (hunting): 021-2964 3602**
**Tel (counseling): 021-2964 3665**
**Fax: 021-2964 3601**
**Email: insja@unhcr.org**

உபயோகமான தொலைபேசி எண்கள் :

| | |
|---|---|
| காவல்துறை | 110 |
| தீ அனைகும் நிலையம் | 113 |
| அம்புலன்ஸ் (ambulance) | 118 |